DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | **CC. 287 /2020** | | |
| Miscellaneous | .. .. | | | |
| Preliminary Register | .. .. | | | |
| Sessions | .. .. | | | |
| Deposition of Witness for | | PW 5<br>Prosecution<br>Court | | |
| Name | : | **திரு.தமிழ்மணி** | Caste | : |
| Father/Husband Name | : | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

**நாள் - 30.05.2022**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 12.54

நான் இராசிபுரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்பொழுது குறுக்கபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.09.2020 அன்று காலை சுமார் 11.30 மணி அளவில் நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தேன். அப்பொழுது இராசிபுர காவல் நிலைய ஆய்வாளர் எனக்கு போன் செய்து, திருச்செங்கோடு - இராசிபுரம் செல்லும் ரோட்டில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அருகில் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபொழுது சந்தேகப்படும்படி வந்த இரண்டு நபர்களை விடித்து விசாரித்ததாகவும், அவர்களிடமிருந்து வாக்குமூலம் பெற என்னையும், எனது உதவியாளரையும் வரச்சொன்னார். நானும், எனது உதவியாளரும் அங்கு சென்றோம். அங்கு தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் விக்கி என்ற நபரும், மகாலிங்கம் என்பவரும் அங்கு இருந்தார்கள். அப்பொழுது போலிசார் அவர்களை விசாரித்தார்கள். அப்பொழுது அந்த நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தேதி, மாதம் நினைவில்லை, 2020ம் ஆண்டு ஒரு நாள் ஆத்துாரிலும், ஆண்டகளுார் கேட் அருகிலும் லாரிகளை திருடியதாக ஒப்புக்கொண்டார்கள். அந்த லாரியின் பதிவு எண். TN 29 AX 0789 என்ற லாரியை ஆத்துாரில் திருடியதாக சொன்னார்கள். அழைத்து சென்றால் திருடிய இடத்தையும், லாரி

வைத்திருக்கும் இடத்தையும் காட்டுவதாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவதாக சாட்சி கையெழுத்திட்டேன். **ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.2, 3** ஆகும். என்னுடன் எனது உதவியாளர் கையெழுத்திட்டார். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆண்டகளூர் கேட்டிடம் திருடியதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தெரியாது. இராசிபுரம் காவல் ஆய்வாளர்தான் போன் செய்து என்னை வரவழைத்தார். நான் காவல் நிலையம் செல்லவில்லை, இராசிபுரம் ஆண்டகளூர் கேட் அருகில் உள்ள IOB வங்கியிடம் சென்றேன். எதிரியிடம் இருந்து இருசக்கர வாகனம் மட்டும் கைப்பற்றினார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.12

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.